---

**மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை - 2013**

மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற காசோட்டங்கள் வேறாகக் காண்பிக்கும் வகையில் காசோட்டக்கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளக் குடியமர்த்தும் குடும்பங்களுக்காக சீமெந்து மற்றும் கூரைத் தகடுகள் வழங்குவதற்கு மட்டக்களப்பு மாவட்டச் செயலாளருக்கு ரூபா 2,890,862 தொகையான நிதியேற்பாடு அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது. 04 பிரதேச செயலகங்களுக்குரிய 119 குடும்பங்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கொள்வனவுகளை உறுதிப்படுத்துகின்ற செலவின விபரம் அல்லது சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
|---|---|
| (அ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் I ஆம் பகுதியின் 12 ஆம் பிரிவு | வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வசித்துவருகின்ற இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக அப்பிரதேசங்களில் அமைக்கப்பட வேண்டிய கிளை அலுவலகங்கள் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் 20(1) ஆம் பிரிவு | அதிகாரசபைக்கு சுயாதீன நிதியமொன்று காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நிதியமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 170,208 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 414,455 ஆனமையால் மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 584,663 வீழ்ச்சியினைக் காண முடிந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளக் குடியமர்த்துகையில் எதிர்நோக்க வேண்டியுள்ள பிரதான பிரச்சினையான உணவு, நீர், சுத்திகரிப்பு வசதிகள், சேதமடைந்த வீடுகளிற்கு நிவாரணமளித்தல், உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர்களிற்கான நலனோம்பல் மற்றும் சுபீட்சம் அடங்கலான மனிதநேய உதவிகளை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பன மீளக் குடியமர்த்துதல் அமைச்சின் பங்குபற்றலுடன் மீளக் குடியமர்த்தல் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகின்றது. 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த அதிகாரசபையின் காலஎல்லை 06 வருடங்களாகும். அது 2013 பெப்ரவரி 22 ஆந் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் மீள் குடியமர்த்துதல் அமைச்சரினால் அதிகாரசபையின் காலஎல்லை 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை மேலும் 03 வருட காலத்திற்காக நீடிக்கப்பட்டிருந்தது.

மீளக் குடியமர்த்துதல் அதிகாரசபை 2007 இன் 09 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 02 அடிப்படை நோக்கங்களும் 14 செயற்பாடுகளும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய விதத்தில் பிரேரணைகள் அல்லது 2013 – 2016 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் கேள்வி கோரலின்றியும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் ரூபா 40,000 மாதாந்த வாடகை அடிப்படையில் ஒரு வாகனம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 400,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் 2013 - 2015 ஆம் ஆண்டு காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கும் செயற்பாடுகள் வெளித்தரப்பினருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டிற்காக உடன்பட்ட தொகை ரூபா 500,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 230,457 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் உரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அமுல்படுத்துவதற்காக நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்களினதும் அகதிகளினதும் தகவல்களைப் பெற்று அதன் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும்

அத்தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 ஆளணி நிருவாகம்

அதிகாரசபையின் பதவியணியினரில் உள்ளடங்கியுள்ள பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் திட்டமிடல் வடிவமைப்பாளர் பதவிகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது 04 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. இவ் வெற்றிடங்களுக்காக மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதிகாரசபையின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனமைக்கு அந்நிலமை காரணமாக அமைந்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அதிகாரசபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மீள் குடியமர்த்துதல் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 2,890,862 தொகை மட்டக்களப்பு மாவட்டச் செயலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தும் இது தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பணிப்பாளர் சபைக் கூட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையினால் 04 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. இந்தக் கூட்டங்களுக்கான நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் தொடர்பான மதிப்பீட்டிற்காக செயலாற்றல் அறிக்கை சமர்ப்பித்து மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஆளணி முகாமைத்துவம்
(ஆ) கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்